APPOLO STUDY CENTRE

# TNPSC GROUP I / II - PRELIMINARY

# INDIAN POLITY – WORKSHEET 2023

## அடிப்படை உரிமைகள்

- அரசியலமைப்பின் பகுதி 3ல் சரத்து 12லிருந்து 35வரை அடிப்படை உரிமைகள் தரப்பட்டுள்ளது.
- இந்த அடிப்படை உரிமைக்கான எண்ணம் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அரசியல் அமைப்பிலிருந்து பெறப்பட்டது.
- பகுதி 3ல் அமைந்துள்ள இந்த உரிமைகள் இந்தியாவின் மகா சாசனம்' (Magna Carta) என்று அழைக்கப்படுகிறது.
- அரசியலமைப்பில் கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மிக விரிவாகவும் நீதிமன்றத்தால் நிலைநிறுத்தப்படுவனவாகவும் அமைந்துள்ளன.

| | பிரிவு | பொருளடக்கம் |
|---|---|---|
| | சட்டக்கூறு 12 | அரசு என்பதன் பொருள் வரையறை |
| | சட்டக்கூறு 13 | அடிப்படை உரிமைகளுக்கு முரணான சட்டங்கள் |
| 1. | சமத்துவ உரிமைகள் (சட்டக்கூறு 14 – 18) | a. சட்டத்தின் முன்னர் சமன்மை மற்றும் சட்டத்தின் சமமான பாதுகாப்பு (சட்டக்கூறு 14)<br>b. சமயம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் அடிப்படையில் பாகுபடுத்துவதை தடை செய்தல் (சட்டக்கூறு 15)<br>c. பொது வேலையமர்த்தங்களில் சம வாய்ப்பளித்தல் (சட்டக்கூறு 16)<br>d. தீண்டாமை ஒழிப்பு (சட்டக்கூறு 17)<br>e. இராணுவ மற்றும் கல்விசார் பட்டங்களைத் தவிர மற்ற விருதுப்பட்டங்கள் ஒழிப்பு (சட்டக்கூறு 18) |
| 2. | சுதந்திர உரிமைகள் (சட்டக்கூறு 19-22) | **ஆறு உரிமைகள் பாதுகாப்பு அவை (சரத்து 19)**<br>i. பேச்சு மற்றும் கருத்துரிமை<br>ii. அமைதியான முறையில் கூடுதல்<br>iii. சங்கங்கள் அமைத்தல்<br>iv. நாட்டின் எப்பகுதிக்கும் செல்லும் உரிமை<br>v. குடியேறும் உரிமை மற்றும்<br>vi. தொழில் செய்யும் உரிமை<br><br>a. குற்றச் செயல்களுக்கான குற்றத்தீர்ப்பு பொறுத்த பாதுகாப்பு (சரத்து 20)<br>b. வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தை |

| | | |
|---|---|---|
| | | பாதுகாக்கும் உரிமை (சரத்து 21)<br>c. தொடக்கக்கல்வி பெறும் உரிமை (சரத்து 21A)<br>d. சில வழக்குகளில் கைது மற்றும் தடுப்புக் காவலுக்கு எதிராக பாதுகாப்பு (சரத்து 22) |
| 3. | சுரண்டலுக்கு எதிரான உரிமைகள் (சரத்து 23 – 24) | a. சட்டவிரோத ஆட்கடத்தல் மற்றும் கட்டாய வேலைக்கு எதிரான பாதுகாப்பு (சரத்து 23)<br>b. தொழிற்சாலைகளில் குழந்தைகளைப் பணியமர்த்துதலைத் தடுத்தல் (சரத்து 24) |
| 4. | சமய சுதந்திரத்திற்கான உரிமைகள் (சரத்து 25 – 28) | a. எந்த ஒரு சமயத்தையும் ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை (சரத்து 25)<br>b. சமய விவகாரங்களை நிர்வகிக்க உரிமை (சரத்து 26)<br>c. எந்தவொரு சமயத்தையும் வளர்க்க வரி செலுத்தாமல் இருக்க உரிமை (சரத்து 27)<br>d. குறிப்பிட்ட சில கல்வி நிறுவனங்களில் சமய போதனை மற்றும் சமய வழிபாடுகளில் கலந்து கொள்ளாமல் இருக்கும் உரிமை (சரத்து 28) |
| 5. | கலாச்சார மற்றும் கல்வி உரிமைகள் (சரத்து 29 - 30) | a. சிறுபான்மையினரின் நலனுக்கான பாதுகாப்பு (சரத்து 29)<br>b. சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் நிறுவுதல் மற்றும் நிர்வகிக்கும் உரிமை (சரத்து 30) |
| 6. | அரசியலமைப்பு தீர்வழிகளுக்கான உரிமைகள் (சரத்து 32) | தனிப்பட்டவரின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும்போது உச்சநீதிமன்றத்தினை அணுக உரிமை நீதிப்பேராணைகள்,<br><br>i. ஆட்கொணர்வு நீதிப்பேராணை<br>ii. செயலுறுத்தும் நீதிப்பேராணை<br>iii. தடையுறுத்தும் நீதிப்பேராணை<br>iv. ஆவணக்கேட்பு நீதிப்பேராணை<br>v. தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை (சரத்து 32) |

## சரத்து 12 - அரசு என்பதன் வரையறை (Definition of State)

◊ அடிப்படை உரிமையில் பல சரத்துகளில் ‘அரசு’ (state) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது. சரத்து 12ல் (பகுதி III) அரசு கீழ்க்கண்டவற்றை குறிக்கிறது.

- இந்திய அரசாங்கம் மற்றும் இந்திய பாராளுமன்றம் அதாவது மத்திய அரசின் நிர்வாக மற்றும் சட்டமன்ற அங்கங்கள்
- மாநில அரசாங்கம் மற்றும் மாநில சட்டமன்றம், அதாவது மாநில அரசின் நிர்வாக மற்றும் மாநில சட்டமன்ற அங்கங்கள்.
- அனைத்து உள்ளாட்சி அமைப்புகளான நகராட்சி, பஞ்சாயத்து, மாவட்ட வாரியம், மேம்பாட்டு அறக்கட்டளைகள் மற்றும் பல.
- மற்ற அனைத்து சட்டப்பூர்வ அதிகார அமைப்புகள் மற்றும் சட்ட பூர்வமற்ற அதிகார அமைப்புகளான LIC, ONGC, SAIL மற்றும் பலவற்றை ‘அரசு’ என்ற வார்த்தை குறிப்பிடுகிறது.

## அடிப்படை உரிமைகளுக்கு முரணான சட்டங்கள்
## (Laws Inconsistent with Fundamental Rights)

- ◊ **சரத்து** 13 அடிப்படை உரிமைக்கு முரண்பாடாக இருக்கும் அனைத்து சட்டங்களையும் செல்லாததாக்கும் உரிமையை வழங்குகிறது. இது நீதி மறுஆய்வு கோட்பாட்டை வழங்குகிறது.
- ◊ இந்த அதிகாரத்தை உச்ச நீதிமன்றத்திற்கும் (சரத்து 32) உயர்நீதிமன்றத்திற்கும் (சரத்து 226) அரசியலமைப்பு வழங்குகிறது.
- ◊ சரத்து 13ல் குறிப்பிடப்பட்டுள்ள ‘சட்டம்’ என்ற சொல் பின்வரும் கருத்துக்களை உள்ளடக்கியது.

    1. பாராளுமன்றம் அல்லது மாநில சட்டமன்றத்தால் இயற்றப்படும் நிலையான சட்டங்கள் (Permanent Laws) இயற்றப்படும்.
    2. ஜனாதிபதி அல்லது மாநில ஆளுநர்களால் இயற்றப்படும் தற்காலிக சட்டங்கள் (Temporary Laws)
    3. ஆணை (Order), மூலச்சட்டங்கள் (Byelaw), விதிமுறைகள் (Rule), ஒழுங்குமுறை (Regulation) அல்லது அறிவிப்புகள் (Notification)
    4. சட்டமன்றம் மூலமாக இல்லாத சட்டங்கள் (Non-legislative sources of law). வழக்கத்தில் உள்ள சட்ட அதிகாரம் கொண்ட சில நடைமுறைகள்.

- ◊ மேற்கண்ட அனைத்தும் அடிப்படை உரிமையை அத்துமீறும் பட்சத்தில் இந்த சட்டங்கள் அனைத்தும் செல்லாது என்று இந்த சரத்தில் கூறப்படுகிறது.

**1951 ஆண்டு அரசியலமைப்பின் முதல் திருத்தச் சட்டம் என்றால் என்ன?**

- முதல் திருத்தம் சட்டம் 1951 இல் அரசியலமைப்பை உருவாக்கி முடித்த தற்காலிக பாராளுமன்ற உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்டுத
- முதல் திருத்தச் சட்டம் 15, 19, 85, 87, 174, 176, 341, 342, 372 மற்றும் 376 ஆகிய பிரிவுகளைத் திருத்தியது.
- நிலச் சீர்திருத்தங்கள் மற்றும் அதில் சேர்க்கப்பட்டுள்ள பிற சட்டங்களை நீதித்துறை மறுஆய்வில் இருந்து பாதுகாக்க ஒன்பதாவது அட்டவணை சேர்க்கப்பட்டது. மேலும் சரத்து 31 க்குப் பிறகு, சரத்து 31A மற்றும் 31B ஆகியவை சேர்க்கப்பட்டது

**திருத்தங்களுக்கான காரணம்:**

- பொதுப் பாதுகாப்புச் சட்டங்கள், பத்திரிகைகள் தொடர்பான சட்டங்கள் மற்றும் குற்றவியல் விதிகள், பேச்சுரிமைக்கான அரசியலமைப்பு உரிமைக்கு இணங்காததாகக் கருதப்பட்ட உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத் தீர்ப்புகளின் வரிசையே இந்தத் திருத்தங்களுக்கு உடனடி காரணம்.

**தாக்கங்கள்**

- பிரிவு 31-ன் விதிகளின்படி, ஒன்பதாவது அட்டவணையில் வைக்கப்பட்டுள்ள சட்டங்கள் குடிமக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகக் கூறி நீதிமன்றத்தில் விவாதம் செய்ய முடியாது.

- பிரிவு 31(A), பொது நலன் கருதி எஸ்டேட்டுகளை கையகப்படுத்துதல் அல்லது எந்த ஒரு சொத்தை அல்லது நிறுவனத்தை நிர்வகிப்பது தொடர்பாக அரசுக்கு மகத்தான அதிகாரத்தை அளித்துள்ளது. அது அத்தகைய கையகப்படுத்ததுதல்களை அல்லது சரத்து 14 மற்றும் 19ன் கீழ் நீதித்துறை மறுஆய்வு வரம்பிலிருந்து விலக்க முயன்றது.

◊ **சங்கரி பிரசாத் வழக்கு (1951):** முதல் சட்டத்திருத்தத்தை (1951) எதிர்த்து தொடரப்பட்டது. அடிப்படை உரிமைகளை கொண்ட பகுதி 3 ஐ சரத்து 368-ன் கீழ் திருத்த பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. சரத்து 13இல் குறிப்பிடப்பட்டுள்ள ‘சட்டம்’ என்ற சொல்லில் அரசியலமைப்பு சட்டத்திருத்தம் அடங்காது என்றும் கூறியது.

◊ **சாஜன் சிங் வழங்கு (1965):** இந்த வழக்கு 17வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தை (1964) ஐ எதிர்த்து தொடரப்பட்டது. உச்சநீதிமன்றம், சங்கரி பிரசாத் வழக்கின் தீர்ப்பை மேலும் உறுதி செய்தது. அடிப்படை உரிமைகள் உட்பட இந்திய அரசியலமைப்பின் எந்தவொரு பகுதியையும் சரத்து – 368இன் கீழ் திருத்தும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உள்ளது.

◊ **கோலக்நாத் வழக்கு (1967):** 17வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தில் (1964) சில சட்டங்களை 9வது அட்டவணையில் சேர்த்ததை எதிர்த்து இவ்வழக்கு தொடரப்பட்டது. முந்தைய தீர்ப்புகள் தள்ளுபடி செய்யப்பட்டு அடிப்படை உரிமைகளைத் திருத்த பாராளுமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மேலும் சரத்து 13இல் கூறப்பட்டுள்ள ‘சட்டம்’ என்னும் வரையறையில் அரசியலமைப்பு சட்டத்திருத்தங்களும் அடங்கும் என்றது.

**24வது சட்டத்திருத்தம் (1971)**

பாராளுமன்றம், கோலக்நாத் வழக்கின் தீர்ப்பிற்கு எதிர்வினையாக 24வது சட்டத்திருத்தத்தை (1971) இயற்றி சரத்து 13 மற்றும் 368ஐ திருத்தியது. இதன்படி அடிப்படை உரிமைகளை சரத்து 368இன் கீழ் திருத்தும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டது. இவ்வதிகாரம் சரத்து 13இன் கீழ் சட்டமாக கருதப்படாது.

◊ **கேசவனந்த பாரதி வழக்கு, 1973**: உச்சநீதிமன்றம் 1973ல் கேசவனந்த பாரதி வழக்கில் அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தால் கொண்டு வரப்பட்ட சட்டம் அடிப்படை உரிமையை மீறும் பட்சத்தில் இவற்றை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடராலாம் என தீர்ப்பு வழங்கியதோடு அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பை பாதிக்கும் சட்டம் செல்லாது எனவும் தீர்ப்பு வழங்கியது.

**25வது திருத்தச் சட்டம் 1971 இன் இரண்டு விதிகளைக் கொண்டுள்ளது:**

- சொத்துக்கான அடிப்படை உரிமையை நீக்கியது

- சட்டக்கூறு 14, 19 மற்றும் 31 இன் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட உரிமைகளை மீறும் அடிப்படையில், சட்டக்கூறு 39(B) அல்லது (C) இல் உள்ள உத்தரவுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட எந்தச் சட்டமும் திருத்தம் செய்ய முடியாது.

**சரத்து 31C**: அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைகளைச் செயல்படுத்த இயற்றப்படும் சட்டங்களைப் பாதுகாத்தல்.

i. சமத்துவ நெறிமுறைக் கோட்பாடாகிய சரத்து 39(b) அல்லது (c) ஐ செயல்படுத்த ஏற்படுத்தப்படும் சட்டங்கள் சரத்து 14 மற்றும் 19ஐ மீறியதாக செல்லாததாக்க இயலாது.

ii. இவ்வாறு இயற்றப்பட்ட சட்டங்களை எக்காரணத்திற்காகவும் நீதிமன்றங்களில் கேள்விக்குட்படுத்த இயலாது.

**சரத்து 39(b)** : பொது நலனைப் பேணுவதற்கு சமூகத்தின் பொருள் வளங்களின் உரிமைகளும் கட்டுப்பாடும் சிறந்த முறையில் பகிர்ந்தளிக்கப்படுவதை அரசின் கொள்கைகள் வழிநடத்த வேண்டும்.

**சரத்து 39(c)**: செல்வம் மற்றும் உற்பத்திச் சாதனங்கள் ஓரிடத்தில் குவிந்து பொருளாதார அமைப்பின் செயல்பாட்டிற்கு தீங்கு விளைவிக்காமல் பாதுகாக்கும் நோக்கில் அரசின் கொள்கைகள் வழிநடத்தபட வேண்டும்.

**42வது சட்டத்திருத்தம் 1976**
**அடிப்படை உரிமைகள் X அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைகள்**

◊ **மினர்வா மில் வழக்கு (1980):** உச்சநீதிமன்றம், அரசியலமைப்பைத் திருத்தும் பாராளுமன்றத்தின் அதிகாரம் வரம்புகளுக்குட்பட்டது என்று கூறியது. மேலும், அரசியலமைப்பு என்பது அடிப்படை உரிமைகள் மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகள் இரண்டின் சமநிலையை அடித்தளமாக கொண்டு அமைக்கப்பட்டது.

## கிரகண கோட்பாடு (மறைத்தல் கோட்பாடு)

- கிரகணத்தின் கோட்பாடு அடிப்படை உரிமைக்கு முரணான அரசியலமைப்பிற்கு முந்தைய சட்டம் அதன் தொடக்கத்திலிருந்தே செல்லுபடியாகாது அல்லது வெற்றிடமாக இருக்காது என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது.

- அத்தகைய சட்டம் அரசியலமைப்பு சட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து மட்டுமே செயல்படாது.

- இது அடிப்படை உரிமைகளால் மறைக்கப்பட்டு அல்லது மறைந்து கிடக்கிறது மற்றும் செயலற்ற நிலையில் உள்ளது, ஆனால் முற்றிலும் இறக்கவில்லை.

- இது சட்டப் புத்தகத்தில் இருந்து முற்றிலும் அழிக்கப்படவில்லை.

**கோட்பாட்டின் உருவாக்கம்**

- கிரகணம் என்ற கோட்பாடு பீகாஜி வழக்கில் (1955) உச்சநீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டது.

- இந்த வழக்கில், மோட்டார் வாகனச் சட்டம் (1939) பிரிவு 43 மத்திய மாகாணங்கள் மற்றும் பெரார் மோட்டார் வாகனங்கள் (திருத்தச் சட்டம் 1947) மூலம் திருத்தப்பட்டது.

- தனி நபர் செயல்பாடுகளைத் தவிர்த்து மோட்டார் போக்குவரத்து வணிகத்தை கையகப்படுத்த இந்த விதி மாநில அரசுக்கு அதிகாரம் அளித்தது.

- ஆனால் 1950 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபோது அது சட்டப் பிரிவு 19 (1) (g) ன் கீழ் அடிப்படை உரிமைகளை மீறியதால் அது செல்லாததாகிவிட்டது.

- பின்னர், முதலாவது சட்டத்திருத்தம் (1951) உறுப்புரை 19(6) ஐத் திருத்தியது மற்றும் எந்தவொரு வர்த்தகத்தையும் வணிகத்தையும் பிரத்தியேகமாகவோ அல்லது தனிநபர்களுடன் போட்டியாகவோ அரசாங்கம் எடுத்துக்கொள்ள அனுமதித்தது.

- இதையடுத்து, மோட்டார் போக்குவரத்து வணிகத்தை கையகப்படுத்தும் அறிவிப்பை மாநில அரசு வெளியிட்டது.

- இந்த அறிவிப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

- 1950 ஜனவரி 26 முதல் 1951 ஜூன் 18 வரை மோட்டார் வாகனச் சட்டம் (1939) பிரிவு 43 செல்லாது என்று மாநில அரசு வாதிட்டது, ஆனால் 1951 ஆம் ஆண்டு முதல் திருத்தச் சட்டம் (1951 ஆம் ஆண்டு) மூலம் 19 (6) வது பிரிவின் கீழ் ஏற்பாட்டைத் திருத்துவதன் மூலம் அதே சட்டத்தின் பிரிவு 43 மீண்டும் செல்லுபடியாகும்.

- இறுதியாக, தடைசெய்யப்பட்ட சட்டம், தற்காலிகமாக, அடிப்படை உரிமையால் மறைக்கப்பட்டது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது, ஆனால் பிரிவு 19 (6) இன் திருத்தம் நிழலை அகற்றியது.

- வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நீதிமன்றம் கிரகணத்தின் கோட்பாட்டைப் பயன்படுத்துவதன் மூலம் அறிவிப்பின் செல்லுபடியை உறுதி செய்தது.

**சரத்து 19 (1) g**

- இந்திய அரசியலமைப்பின் பிரிவு 19(1) g அனைத்து குடிமக்களுக்கும் எந்தவொரு தொழிலையும் செய்யவோ அல்லது தொழில், வர்த்தகம் அல்லது வியாபாரத்தை மேற்கொள்வதற்கான உரிமைகளை வழங்குகிறது.

**சமத்துவ உரிமை (சரத்து 14-18)**

1. **சரத்து 14 சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் மற்றும் சட்டத்தின் சமமான பாதுகாப்பு (Equality before law and Equal Protection of Law)**

- சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பது பிரிட்டிஷ் கோட்பாடு மற்றும் அனைவருக்கும் சட்டத்தின் சமமான பாதுகாப்பு என்பது அமெரிக்க கோட்பாடு ஆகும்.
- சட்டத்திற்கு முன் சமத்துவம் (Equality before law) என்பது பிறப்பு மற்றும் சமயம் போன்றவற்றை கருத்தில் கொள்ளாமல் இருப்பதால் இவை எதிர்மறையானதாகும்.
- ஆனால் அனைவருக்கும் சட்டத்தின் சமமான பாதுகாப்பு (Equal Protection of laws) என்பது அனைவரையும் ஒரே மாதிரி நடத்த வழிவகை செய்வதால் இவை நேர்மறையானதாகும்.

**சட்டத்தின் ஆட்சி**

- ‘சட்டத்தின் முன் சமத்துவம்’ என்பது பிரிட்டிஷ் சட்ட அறிஞரான ஏ.வி. டைசியின் ‘சட்டத்தின் ஆட்சி’ எனும் கோட்பாட்டின் ஒரு கருத்துரு ஆகும்.

**சமத்துவத்திற்கான விதிவிலக்குகள்**

- சரத்து 361இன் கீழ் இந்திய குடியரசுத் தலைவர் மற்றும் மாநில ஆளுநர்கள் பெறும் விலக்குகள்
- சரத்து 361-A, 105 மற்றும் 194ன் கீழ் பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பெறும் விலக்குகள்
- சரத்து 31-C இன்படி சரத்து 14-க்கு வழங்கப்பட்டுள்ள விலக்கு வழிகாட்டு நெறிமுறைகளில் உள்ள சரத்து 39(b) மற்றும் (c) ஐ செயல்படுத்துவதற்காக இயற்றப்படும் சட்டங்களை சரத்து – 14 க்கு எதிரானது என கேள்விக்கு உட்படுத்த இயலாது. உச்சநீதிமன்றம் கூறியதாவது, “சரத்து 31C எங்கு நுழைகிறதோ, அங்கு சரத்து – 14 வெளியேறிவிடுகிறது.
- வெளிநாட்டு ஆட்சியாளர்கள், தூதர்கள் மற்றும் ஐ.நா. அதிகாரிகள் ஆகியோர் பன்னாட்டு தூதரக விலக்கைப் பெறுகின்றனர்.

**2. சரத்து 15 மதம், இனம், ஜாதி, பாலினம் மற்றும் பிறந்த இடத்தின பெயரால் பாகுப்படுத்தலை தடுத்தல் (Prohibition of Discrimination on Certain Grounds)**

**கே. கீழ்க்கண்டவற்றில் அரசியலமைப்பு சட்டத்தின் எந்த ஷரத்து கடைகள் மற்றும் பொதுக் கேளிக்கை இடங்களில் குடிமக்களுக்கு உள்ள உரிமைகள் குறித்து கூறுகிறது?**

a. ஷரத்து 13 b. ஷரத்து 15 c. ஷரத்து 17 d. ஷரத்து 18

- சரத்து 15 குடிமக்களுக்கு மட்டும் இருக்கும் ஒரு அடிப்படை உரிமை ஆகும். இவை இந்திய குடிமகனுக்கு எதிரான பாகுபாட்டை (Discriminate) தடை செய்கிறது.

அதேபோல் மதம், இனம், பாலினம், ஜாதி மற்றும் பிறப்பிடத்தின் அடிப்படையில் பாகுபாடு செய்வதை மட்டுமே எதிர்க்கிறது.

**நான்கு விலக்குகள்**

i. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

ii. சமுதாயம் மற்றும் கல்வியில் பின்தங்கியவர்கள், அல்லது தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு அரசு கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு மற்றும் கட்டண நிவாரணம் அளிக்க அரசுக்கு வழங்கப்படும் விலக்கு

iii. சமுதாயம் மற்றும் கல்வியில் பின்தங்கியவர்கள், அல்லது தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு அரசு உதவி பெறும் மற்றும் உதவி பெறாத கல்வி நிறுவனங்களின் சேர்க்கையில் தனிச்சலுகை வழங்குதல். இது சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கு பொருந்தாது.

iv. பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினரின் முன்னேற்றத்திற்காக அரசு சிறப்பு சலுகைகளை வழங்குதல்

### 3. சரத்து 16 பொது வேலையமர்த்தங்களில் சமவாய்ப்பினை வழங்குதல் (Equality of Opportunity in Public Employment)

◊ சரத்து 15ல் குறிப்பிடுவது போன்று அரசியலமைப்பானது பொது வேலை வாய்ப்புகளில் சமத்துவ வாய்ப்பை ஜாதி, மதம், இனம், பாலினம், இருப்பிடம் அல்லது பிறப்பிடத்தின் அடிப்படையில் பாகுபாடு இல்லாமல் சம வாய்ப்புகளை வழங்க உத்திரவாதம் செய்கிறது.

**கே. கீழ்க்காணும் எந்த அடிப்படை உரிமை இந்திய குடிமக்களுக்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளது?**

a. ஷரத்து 14 b. ஷரத்து 21 c. ஷரத்து 16 d. ஷரத்து 22

**காகா கலேல்கர் ஆணையம்**

1953இல் காகா கலேல்கர் தலைமையில் 11 பேர் கொண்ட முதலாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டது. இதன் அறிக்கை 1955ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் அவை செயல்படுத்தப்படவில்லை.

**மண்டல் குழு மற்றும் அதன் விளைவுகள்:**

1. 1979ல் மொராஜி தேசாய் அரசு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் குழுவை அமைத்தது. இதன் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் (Member of Parliament) B.P. மண்டல் நியமிக்கப்பட்டார். இந்திய அரசமைப்பு சட்டத்தின் சட்டக்கூறு 340 படி சமூகத்தில் மற்றும் கல்வியில் பின்தங்கிய வகுப்பினரின் நிலைமைகளை ஆராய்ந்து அவர்களின் முன்னேற்றத்திற்கான பரிந்துரைகளை வழங்க அமைக்கப்பட்டது.

2. இக்குழு 1980ல் இதன் பரிந்துரையை சமர்ப்பித்தது. இது **3743** பிரிவின் சமூக மற்றும் கல்வியில் பின்தங்கிய பிரிவுகளை அறிந்தது

3. அவர்கள் SC, ST யைத் தவிர்த்து மொத்த மக்கள் தொகையில் 52% உள்ளனர். இக்குழு இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பிற்கு அரசுப்பணியில் 27% இடஒதுக்கீடு பரிந்துரை செய்தது. ஆகவே SC, ST மற்றும் OBC –க்கு மொத்த இட ஒதுக்கீடு 50% ஆகிறது.

4. இந்திரா காந்தி மற்றும் இராஜிவ் காந்தி அரசு அதைத் தொடர்ந்து வந்த இந்திரா காந்தி மற்றும் இராஜிவ் காந்தி தலைமையிலான காங்கிரஸ் அரசுகள் அதன் அரசியல் சர்ச்சைக்குரிய இயற்கையால் செயல்படுத்த முன் வரவில்லை. (பத்து வருடங்களுக்கு பிறகு 1990-ல்)

**V.P. சிங் அரசு**

**V.P. சிங்** அரசு OBC க்கு அரசுப்பணியில் 27% இடஒதுக்கீடு அறிவித்தது.

**நரசிம்மராவ் அரசு**

பிறகு 1991ல் நரசிம்மராவ் அரசு இதில் இரண்டு மாற்றங்களை அறிமுகப்படுத்தியது. அவை : (a) 27% இடஒதுக்கீட்டில் OBC பிரிவில் ஏழை மக்களுக்கு முன்னுரிமை அதாவது, பொருளாதார நிலை அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்குவது (b) இதற்கு முன் உள்ள இடஒதுக்கீடு திட்டங்களால் பயனடையாத, பொருளாதாரத்தில் பின்தங்கிய உயர்சாதி வகுப்பினருக்கு அரசுப்பணியில் 10% இடஒதுக்கீடு செய்தல்.

**மண்டல் வழக்கு (1992) இந்திரா சஹானி Vs இந்திய யூனியன் (1993) வழக்கு**

- பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அரசுப்பணியில் இட ஒதுக்கீடு வழங்க வகைசெய்யும் சட்டக்கூறு 16(4)-ன் நோக்கம் மற்றும் எல்லை குறித்து புகழ்பெற்ற மண்டல் வழக்கில் (1992) உச்சநீதிமன்றம் முழுவதுமாக ஆய்ந்தது.
- உச்சநீதிமன்றம் உயர்சாதி வகுப்பில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு அளிக்க இருக்கும் கூடுதல் 10% இட ஒதுக்கீட்டை ரத்து செய்தது மற்றும் சில விதிமுறைகளுடன் OBC–ற்கான 27% இடஒதுக்கீட்டை ஏற்றுக்கொண்டது.

1. **ராம் நந்தன் குழு**: OBC–ல் உள்ள கீரிமிலேயரை (பாலேடு அடுக்கு) கண்டறிய ராம் நந்தன் குழு அமைக்கப்பட்டது. இக்குழு 1993 ல் அறிக்கை சமர்பித்தது. இது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2. **பிற்படுத்தப்பட்டோருக்கான தேசிய ஆணையம்:** பாராளுமன்ற சட்டத்தின் படி 1993ல் பிற்படுத்தப்பட்டோருக்கான தேசிய ஆணையம் அமைக்கப்பட்டது. இது பிற்படுத்தப்பட்டோராக குறிக்கப்பட்ட பட்டியலில் உள்ளடங்கிய சாதிகள் மற்றும் அவற்றுள் இல்லாத சாதிகளை அரசுப்பணி இடஒதுக்கீட்டிற்காக கருத்தில் கொள்கிறது.

   பின்னர் 102வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் (2018) மூலம் இந்த ஆணையம் அரசியலமைப்பு அங்கீகாரம் பெற்றது.

3. 76வது சட்டதிருத்த சட்டம் 1994: தமிழ்நாடு இடஒதுக்கீடு சட்டம் 1994-யை 9வது அட்டவணையில் சேர்க்கிறது. இது இடஒதுக்கீடு உச்சவரம்பு 50% ற்கு அதிகமாக தமிழ்நாட்டில் வழங்கப்படும் 69% இடஒதுக்கீடு நடைமுறையை நீதி மறுசீராய்விற்கு உட்படாமல் காக்கிறது.

**பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு இட ஒதுக்கீடு (EWS)**

**103வது சட்டத்திருத்தம் (2019)**

1. பொது வேலைவாய்ப்பில் EWS க்கான இட ஒதுக்கீடு 103வது சட்டத்திருத்தம் (2019) மூலம் கொண்டுவரப்பட்டது.
2. இதனை நடைமுறைப்படுத்த 2019 ஆணை மூலம், இந்திய அரசு பொதுப்பணிகளில் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினருக்கு (EWS) 10% இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.

**கே. பின்வருவனவற்றில் எந்த வழக்கில், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு இடஒதுக்கீடு வழங்கும் 103-வது அரசியல் சட்டத் திருத்தத்தை உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது?**

a. அசோக்குமார் தாக்கூர் எதிர் இந்திய ஒன்றியம்
b. ஜன்ஹித் அபியான் எதிர் இந்திய ஒன்றியம்
c. பி.ஏ. இனாம்தார் எதிர் மஹாராஷ்ட்ரா அரசு
d. உன்னி கிருஷ்ணன் எதிர் ஆந்திர பிரதேஷ் அரசு

## 4. சரத்து 17 தீண்டாமை ஒழிப்பு (Abolition of Untouchability)

- தீண்டாமை என்னும் சொல் இந்திய அரசியலமைப்பில் எந்த ஒரு இடத்திலும் வரையறுக்கப்படவில்லை. எனினும் மைசூர் உயர்நீதிமன்றம், தீண்டாமையை நேரடி பொருளில் எடுத்துக்கொள்ளாமல் வரலாற்றில் நமது நாட்டில் உருவாக்கப்பட்ட வழக்காறுகளையே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறியது.

**தீண்டாமை (குற்றம்) சட்டம் - 1955**

1. பாராளுமன்றத்திற்கு தீண்டாமையை எதிர்த்து சட்டமியற்றும் அதிகாரம் உள்ளது. 1955ல் தீண்டாமை (குற்றம்) சட்டம் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது. இவையே 1976ல் திருத்தம் செய்யப்பட்டு சிவில் உரிமைகளின் பாதுகாப்பு சட்டம் 1955 என பெயர் மாற்றி தண்டனைகளை மேலும் கடுமையாக்கியது.

**மற்ற சட்ட நடவடிக்கைகள்**

1. மற்ற சட்ட நடவடிக்கைகள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 – 2015இல் திருத்தப்பட்டது; தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள், **1995-2014**இல் திருத்தப்பட்டது; மனித கழிவுகளை மனிதர்களே அள்ள தடைச்சட்டம், 2013.
2. உச்சநீதிமன்றத்தின்படி சரத்து 17 தனிநபர்களுக்கு எதிராகவும் செல்லத்தக்கது.

## 5. சரத்து 18 பட்டங்கள் ஒழிப்பு (Abolition of Titles)

◈ அரசாங்கம், இராணுவ மற்றும் கல்வி பட்டங்களைத் தவிர பிற பட்டங்களை வழங்கிட தடை செய்கிறது.

◈ வெளிநாடுகளில் வழங்கும் பட்டங்களை இந்திய குடிமக்கள் பெறத் தடை செய்கிறது.

◈ எனவே காலனித்துவ நாடுகளால் வழங்கப்பட்ட மகாராஜா, ராஜ் பகதூர், ராய் பகதூர், ராய் சாகிப், திவான் பகதூர் போன்ற வம்சாவளிப்பட்டங்கள் சரத்து 18ன் படி சமன்மையை பாதிப்பதால் தடை செய்யப்பட்டுள்ளன.

◈ 1954ஆம் அண்டு தேசிய விருதுகள் உருவாக்கப்பட்டன. பின்னர் 1977ல் மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதா அரசு அதை நிறுத்தியது. மீண்டும் அவை 1980இல் இருந்து இந்திராகாந்தி அரசால் தொடரப்பட்டது.

**பாலாஜி ராகவன் வழக்கு**

◈ பாரத ரத்னா, பத்ம விபூஷன், பத்ம பூஷன், பத்ம ஸ்ரீ போன்ற தேசிய விருதுகளின் அரசியலமைப்புத் தகுதி உச்சநீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டது. மேலும் இவ்விருதுகள் சரத்து 18இல் கூறப்பட்டுள்ள 'பட்டங்கள்' என்ற வரையறையில் வராது என்றும் வம்சாவளி முடியாட்சி பட்டங்களே வரும் என்றும் தெளிவுப்படுத்தியது.

## 1. சரத்து 19 ஆறு உரிமைகளை பாதுகாத்தல் (Protection of Six Rights)

1. **பேச்சு மற்றும் கருத்துகளை வெளிபடுத்தும் சுதந்திரம்**

   இது ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு விஷயம் குறித்த அவர்களது பார்வை, கருத்து, நம்பிக்கை போன்றவற்றை, அவர்கள் வாய்வார்த்தை, எழுத்து, அச்சடித்தல், வரைபடம் அல்லது மற்ற எந்த முறைப்படியும் சுதந்திரமாக வெளிப்படுத்த உரிமை வழங்குகிறது.

2. ஆயுதங்கள் இன்றி அமைதியாக கூடுவதற்கான சுதந்திரம்
3. கழகங்கள், சங்கங்கள் அல்லது கூட்டுறவு அமைப்புகள் அமைக்க சுதந்திரம்
4. இந்திய ஆட்சி எல்லைக்குள் தடையின்றி சென்றுவர சுதந்திரம்

**கே. இந்திய அரசமைப்பு சட்டத்தில் _________ல் சுதந்திரமாக நடமாடும் உரிமை ஒவ்வொருவரின்அடிப்படை உரிமையாக உறுதி செய்யப்பட்டுள்ளது?**

a. உறுப்பு 19 (1) (a)  b. உறுப்பு 19 (1) (b)
c. உறுப்பு 19 (1) (c)  d. உறுப்பு 19 (1) (d)

5. இந்திய ஆட்சி நிலவரையில் எப்பகுதியிலும் குடியிருக்கவும் நிலையாக குடியமரவும் சுதந்திரம்.
6. **தொழில் செய்வதற்கான சுதந்திரம்:**

   இவ்வுரிமை அனைத்து குடிமகன்களுக்கும் எந்தவொரு தொழில் செய்யவும் அல்லது எந்தவொரு பணி, வணிகம் அல்லது வியாபாரம் செய்யவும் அனுமதி

அளிக்கிறது. ஒருவருடைய வாழ்வாதாரத்திற்கான சம்பாதிக்கும் அனைத்து வகைகளையும் உள்ளடக்கிய மிகப் பரந்த உரிமை (Very wide).

- இவ்வுரிமைகளை நடைமுறைப்படுத்துதலில் பொதுமக்களின் தன்மையைக் கருதி அரசு சில கட்டுப்பாடுகளை விதிக்க முடியும்.

**2. சரத்து 20 குற்றங்களுக்கான குற்றத்தீர்ப்பு தொடர்பான உரிமையை பாதுகாத்தல் (Protection in Respect of Conviction for Offences)**

- சரத்து 20ல் அரசியலமைப்பு சில தண்டனைக்கான வரையறையை பின்வருமாறு தடை செய்து பாதுகாக்கிறது.
  1. முந்தைய கால சட்டத்தினை அடிப்படையாக கொண்டு தற்போதைய குற்றச்சட்டத்தை அமலாக்குவதை தடுத்தல்.
  2. ஒரே குற்றத்திற்காக இரட்டை தண்டனை அல்லது ஒன்றுக்கு மேலான தண்டனையை தடுத்தல்.

| |
|---|
| **கே. இந்திய அரசமைப்பில் இடம்பெற்றுள்ள "இரட்டை இடர்பாடு" என்பதன் விளக்கம் பின்வருவனவற்றுள் எந்த ஒன்றிற்குப் பொருந்தும்?**<br>a. ஒருவரது உயிரோ, உடல்சார் உரிமையோ, சட்டம் விதித்தமைத்துள்ள நெறிமுறைப்படி அன்றி, பறிக்கப்படுதல் ஆகாது.<br>b. இந்தியாவின் குடிமகன் எவரும், அயல்நாட்டு அரசுஎதனிடமிருந்தும் விருதுப்பட்டம் எதனையும் ஏற்றுக் கொள்ளுதல் ஆகாது.<br>c. பதினான்கு வயதுக்குக் குறைந்த சிறார் எவரையும், தொழிற்சாலை அல்லது சுரங்கம் எதிலும் வேலையில் அமர்த்துதல் ஆகாது. மேலும் பிற இடர்மிகு வேலையமர்த்தம் எதிலும் ஈடுபடுத்தலும் ஆகாது.<br>d. ஒருவர், ஒரே குற்றச் செயலுக்காக ஒருமுறைக்க மேல் வழக்கு தொடரப்படுதலும் தண்டிக்கப்படுதலும் ஆகாது. |

  3. சுயசாட்சிய சான்றுகளை கட்டாயமாக தருவதை தடுத்தல்.
     இவை குற்றவியல் சட்டங்களுக்கு மட்டுமே பொருந்தும். குடிமைச் சட்டங்களுக்கப் பொருந்தாது.

**3. சரத்து 21 வாழ்க்கை மற்றும் தனிநபர் சுதந்திரத்தை பாதுகாத்தல் (Protection of Life and Personal Liberty)**

- **கோபாலன் வழக்கு (1950):**
  1950ல் புகழ்பெற்ற கோபாலன் வழக்கில் உச்சநீதிமன்றம் சரத்து 21ல் சில தடைகளை விதித்தது. சரத்து 21 ஆனது, தன்னிச்சையான நிர்வாக செயல்பாட்டிற்கு எதிரான பாதுகாப்பு மட்டுமே தவிர தன்னிச்சையான சட்ட செயல்பாட்டிற்கு எதிரானது அல்ல என்றது.

- **மேனகா வழக்கு (1978):**

  1. ஆனால் **1978ல்** கோபாலன் வழக்கிற்கு மாறாக உச்சநீதிமன்றம் மேனகா வழக்கில் சரத்து 21ல் சில விரிவான வரையறைகளை கூறியது.

2. அதன்படி தனிப்பட்ட மற்றும் வாழ்க்கை சுதந்திரம் சட்ட விதிமுறைக்கு உட்பட்டு இருக்கும் பட்சத்தில் தனிப்பட்ட மற்றும் வாழ்க்கை சுதந்திரத்திற்கு தடை இல்லை என்று விளக்கியது.

3. இதன்படி, சரத்து 41 ஆனது தன்னிச்சையான நிர்வாக செயல்பாடுகள் மட்டுமின்றி தன்னிச்சையான சட்ட செயல்பாடுகளுக்கு எதிரான பாதுகாப்பையும் அளிக்கிறது என்றது. அமெரிக்க கோட்பாடான சட்டத்திற்குரிய செயல்முறை அறிமுகம் செய்யப்பட்டது.

### 4. சரத்து 21A கல்விக்கான உரிமை (Right to Education)

- 2002ல் 86வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின்படி கல்விக்கான உரிமை சரத்து 21A அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.

- சரத்து 21A வின் படி அரசானது சட்டத்தின் மூலம் 6வயது முதல் 14 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் கட்டாயமான மற்றும் இலவச கல்வியை வழங்க தீர்மானம் கொண்டு வரப்பட்டது

- இது 'அனைவருக்கும் கல்வி' என்ற இலக்கை அடைய ஒரு முக்கிய மைல் கல்லாக உள்ளது. அரசு இதை 'குடிமக்கள் உரிமைகளின் அத்தியாயத்தில் இரண்டாவது புரட்சியின் விடியல்' என்று விளக்குகிறது.

- சரத்து 21A வின் அடிப்படையில், பாராளுமன்றம் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக்கல்வி உரிமைச் சட்டம், 2009 ஐ இயற்றியது.

### 5. சரத்து 22 சில வழக்குகளில் கைது மற்றும் தடுப்பு காவலுக்கு எதிரான உரிமை (Protection Against Arrest and Detention)

- நிலையற்ற சந்தர்ப்பங்களில் தன்னிச்சை கைது மற்றும் தடுப்பு காவலுக்கு எதிரான உரிமையை சரத்து 22ல் அரசியலமைப்பு விளக்குகிறது.

- **தண்டனைக்காவல்**

- காவல் இருவகைக் கொண்டது. தண்டனைக்காவல் என்பது ஒரு நபர் செய்த குற்றத்திற்காக விசாரிக்கப்பட்டு பின்னர் அவருக்கான தண்டனையாக காவலில் வைக்கப்படுகிறது.

- **தடுப்புக்காவல**

  ஆனால் தடுப்புக்காவல் என்பது விசாரணையின்றி காவலில் வைப்பது. இதன் நோக்கம் எதிர்காலத்தில் நிகழவிருக்கும் குற்றத்தை தடுப்பதே ஆகும். அதாவது சந்தேகத்தின் அடிப்படையில் எடுக்கப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை

  சரத்து 22 இரு பகுதிகளைக் கொண்டது – முதல் பகுதி சாதாரண சட்டங்களைப் பற்றியது. இரண்டாவது பகுதி தடுப்புக்காவல் சட்டங்களைப் பற்றியது

  **சாதாரணச் சட்டம்**

  1. கைது செய்யப்படுவதற்கான காரணத்தை அறிந்து கொள்ள உரிமை

2. விருப்பத்திற்கேற்ப வழக்கறிஞரைக் கொண்டு தன்னை பாதுகாத்துக் கொள்ளும் உரிமை

3. கைது செய்யப்பட்ட நபரை 24 மணி நேரத்திற்குள் நீதிபதியின் முன் சமர்ப்பிக்க வேண்டும். இந்த நேரத்தை பயண நேரத்தைத் தவிர்த்து கணக்கில் கொள்ள வேண்டும்.

4. நீதிபதியின் ஒப்புதல் இன்றி 24 மணிநேரத்திற்கு மேல் அந்நபரை காவலில் வைக்கக் கூடாது

**தடுப்புக்காவல் சட்டம்**

1. ஆலோசனை குழுவின் உத்தரவின்றி கைது செய்யப்பட்ட எந்த நபரையும் மூன்று மாதங்களுக்கு அதிகமாக காவலில் வைத்திருக்க இயலாது. இந்த குழுவில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் உறுப்பினராக இருப்பர்.

♦ பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட தடுப்புக்காவல் சட்டங்கள் பின்வருமாறு

1. 1950ன் தடுப்புக் காவல் சட்டம் (Preventive Detention Act) 1969ல் இவை முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.
2. 1971ன் உள்நாட்டு பாதுகாப்பு நிர்வாகச் சட்டம் (Maintenance of Internal Security Act - MISA) 1978ல் இவை நீக்கப்பட்டது.
3. அன்னிய செலவாணி மற்றும் கடத்தல் நடவடிக்கைகளின் தடுப்புச்சட்டம் (Conservation of Foreign Exchange and Prevention of Smuggline Activities Act - COFEPOSA), 1974ல் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது.
4. 1980ன் தேசிய பாதுகாப்புச் சட்டம் (National Security Act-NASA)
5. 1980ன் கள்ள வணிக தடுப்பு மற்றும் அத்தியாவசிய பொருள்களின் விநியோகம் மற்றும் பராமரிப்பு சட்டம் (Prevention of Blackmarketing and Maintenance of Supplies of Essential Commodities Act - PBMSECA).
6. 1985ன் பயங்கரவாத மற்றும் கலக நடவடிக்கைகள் சட்டம் (தடுப்பு) (Terrorist and Disruptive Activities-(Prevention)TADA) 1995ல் நீக்கப்பட்டது. இதன் விளைவாக 2002ல் பயங்கரவாத தடுப்புச் சட்டம் (Prevention of Terrorism Act - POTA) கொண்டு வரப்பட்டது. 2004ல் இவை நீக்கப்பட்டது.
7. போதைப்பொருள் தடுப்பு மற்றும் மனநிலை மாற்றும் பொருட்கள் தடுப்புச் சட்டம், 1988 (PITNDPS Act, 1988)

இந்தியாவில் உள்ளது போல் உலகின் எந்தவொரு மக்களாட்சி அரசும் தடுப்புக்காவலை அரசியலமைப்பின் ஒருங்கிணைந்த பகுதியாக கொண்டிருக்கவில்லை.

**சுரண்டலுக்கு எதிரான உரிமைகள் (சரத்து 23-24)**

**1. சரத்து 23 சட்டவிரோத ஆட்கடத்தல் மற்றும் கட்டாய பணிக்கு எதிரான உரிமை**

## (Prohibition of Traffic in Human Being and Forced Labour)

- இந்த சரத்தில் மனிதர்களை கடத்தல் மற்றும் பெகர் என்னும் ஜமீன்தார்களால் செயல்படுத்தப்பட்ட கட்டாய தொழிலாளர் முறைக்கும், கட்டாய உழைப்புக்கும் எதிராக சட்டத்தின் மூலம் நலிந்த பிரிவினருக்கு பாதுகாப்பு அளிக்கிறது.

- இந்த உரிமை அரசிடமிருந்து மட்டுமல்லாமல் தனிநபரிடமிருந்தும் ஒருவரை பாதுகாக்கிறது. சரத்து 23 தொடர்பான சட்டங்கள்,

    1. சட்டவிரோதக் கடத்தல் (தடை) சட்டம், 1956
    2. கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டம், 1976
    3. குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948
    4. ஒப்பந்தத் தொழிலாளர் சட்டம், 1970
    5. சம ஊதியச் சட்டம், 1976

    **சரத்து 23 -** நாட்டு நலன் கருதி பொதுக்காரணத்திற்காக அரசு மக்களிடம் கட்டாயமாக வேலை வாங்குவது சுரண்டலுக்குள் அடங்காது. எடுத்துக்காட்டாக இராணுவ மற்றும் சமூக சேவைப் பணிகள்

**பாலியல் தொந்தரவுக்கெதிரான உரிமை**

- பணியிடங்களில் பாலியல் வன்முறை (தடுப்பு, பாதுகாப்பு மற்றும் குறைதீர்ப்பு) சட்டம் 2013, பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012 (POCSO), இச்சட்டம் 2016ல் திருத்தப்பட்டது.

**கே.கீழ்க்கண்ட அடிப்படை உரிமைகளில் எந்த உரிமை மீறல் குற்றம் என அந்த உறுப்பிலேயே வெளிப்படையாக கூறப்பட்டுள்ளது?**
a. உறுப்பு 21 b. உறுப்பு 23 c. உறுப்பு 24 d. உறுப்பு 25

**கே. சுரண்டலுக்க எதிரான உரிமை தொடர்பான சரியான விளக்கம் பின்வருவனவற்றில் எது?**
a. சிறுபான்மையினர் நலன் பாதுகாப்பு.
b. மனித இழிதொழில் வாணிகம் மற்றும் ஊதியமற்ற கட்டாய உழைப்பிற்கு
c. பட்டியலின் (SC) மற்றும் பட்டியல் பழங்குடியினத்தவர்களுக்கு இட ஒதுக்கீடு.
d. தன்செயலால் தானே குற்றசாட்டிற்கு உட்படத்தலுக்கான தடை.

**2. சரத்து 24 தொழிற்சாலைகளில் குழந்தைகளை பணியமர்த்துவதற்கு எதிரான உரிமை**

## (Prohibition of Employment of Children in Factories, etc.)

1. அரசியலமைப்பு சரத்து 24-இன்படி 14 வயதிற்குட்பட்ட எந்த குழந்தையையும் தொழிற்சாலை அல்லது சுரங்கம் அல்லது கட்டுமானம் மற்றும் இரயில்வே போன்ற ஆபத்தான பணிகளில் ஈடுபடுத்தக்கூடாது.

2. குழந்தை தொழிலாளர் (தடை மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1986 இந்த சரத்தின்கீழ் வரும் முக்கிய சட்டமாகும். மற்ற சட்டங்கள் பின்வருமாறு:

i. குழந்தைகள் வேலைவாய்ப்பு சட்டம், 1938
ii. தொழிற்சாலைகள் சட்டம் 1948
iii. சுரங்கச் சட்டம் 1952
iv. வணிகக் கப்பல் சட்டம் 1958
v. தோட்டத் தொழிலாளர் சட்டம் 1951
vi. மோட்டார் வாகனத் தொழிலாளர் சட்டம் 1951
vii. தொழில் பழகுநர் சட்டம் 1961
viii. பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர் சட்டம், 1966

**குழந்தை தொழிலாளர் திருத்தச்சட்டம், 2016**

- முதன்மைச் சட்டம், குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினர் தொழிலாளர் (தடை மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1986 என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டது.
- அனைத்து வேலைகளிலும் 14 வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகள் வேலை செய்யத் தடை

- வளரிளம் பருவத்தினர் (14 முதல் 18 வயது) ஆபத்தான வேலைகளில் ஈடுபடத்தடை

**கைலாஷ் சத்யார்த்தி**

- குழந்தைகளைக் காப்பாற்றும் இயக்கத்தை நிறுவிய இவர் 2014ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசினைப் பெற்றார். 86,000க்கும் மேற்பட்ட குழந்தைகள் குழந்தைத் தொழிலாளர் முறை, கொத்தடிமை மற்றும் ஆட்கடத்தல் போன்ற பல சமூக தீமைகளிலிருந்து இவரால் மீட்கப்பட்டுள்ளனர்.

**மதச்சுதந்திரத்திற்கான உரிமை (சரத்து 25-28)**

**1. சரத்து 25 – எந்த ஒரு சமயத்தையும் ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை (Freedom of Conscience and Free Profeesion, Practice and Propagation of Religion)**

**கே. கீழ்க்காணும் எந்த அடிப்படை உரிமையானது, இந்திய அரசியலமைப்பு சட்டத்தின்படி, பொது ஒழுங்கு, ஒழுக்க நெறி மற்றும் நல்வாழ்பு ஆகியவற்றின் வரம்புமுறைக்குட்பட்டது?**

a. கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம் b. தனிநபர் உரிமை
c. சமய சுதந்திரம் d. கல்வி உரிமை

**2. சரத்து 26 மத விவகாரங்களை நீர்வகிக்கும் அதிகாரம் (Freedom to Manage Religious Affairs)**

- சரத்து 26ல் ஒவ்வொரு எல்லா வகையான பின்வரும் உரிமைகளை குறிக்கிறது.

1. எந்த மதத்தை சார்ந்தவரும் நிறுவனங்களை ஏற்படுத்தி தன்னுடைய மதத்தை பரப்புவதற்கும் நிர்வகிப்பதற்கும் அதிகாரம் உள்ளது.
2. மதம் தொடர்பான செயலை நிர்வாகம் செய்யும் அதிகாரம்
3. மதம் சார்ந்த அசையும் மற்றும் அசையா சொத்துக்களை வாங்குவதற்கு உரிமை
4. அவற்றை சட்டப்படி நிர்வாகம் செய்யும் அதிகாரம்.

**3. சரத்து 27 குறிப்பிட்ட மதத்தின் உயர்வுக்காக வரி செலுத்துவதிலிருந்து சுதந்திரம் (Freedom from Taxation for Promotion of a Religion)**

- ◊ அதேபோல் எந்த ஒரு அரசும் ஒரு குறிப்பிட்ட மதத்தை முன்னேற்ற பொது நிதியிலிருந்து செலவிட முடியாது. அரசானது எந்த ஒரு தனி மதத்தையும் ஆதரிக்கும் விதத்தில் செயல்படக் கூடாது.
- ◊ அரசானது மதத்தை மதச்சார்பற்ற முறையில் நிர்வகிக்க கட்டணத்தை நிறுவனங்கள் மூலம் நிர்ணயிக்கலாம். ஆனால் வரிவிதிக்க தடைச் செய்யப்படுகிறது.

**4. சரத்து 28 சில கல்வி நிறுவனங்களில் மத போதனை அல்லது மத வழிபாடுகளில் கலந்து கொள்ளாமல் இருக்க சுதந்திரம்** (Freedom from Attending Religious Instruction)

- ◊ அரசியலமைப்பு சரத்து 28ல் அரசு நிதியில் இயங்கும் எந்த ஒரு கல்வி நிறுவனங்களாலும் மத போதனை மற்றும் மத வழிபாட்டு வருகைக்கான சுதந்திரத்தை அளிக்கிறது. மேலும் ஒருவருடைய அனுமதியின்றி அரசு மற்றும் அரசு நிதி உதவியினால் இயக்கப்படும் கல்வி நிறுவனங்களில் மத போதனை அல்லது மத வழிபாட்டில் ஈடுபடுத்த இயலாது.

**கலாச்சார மற்றும் கல்வி உரிமைகள் (சரத்து 29-30)**

**1. சரத்து 29 சிறுபான்மையினர் நலனுக்கான பாதுகாப்பு (Protection of Intersts of Minorities)**

- ◊ சரத்து 29ஆனது, சமூகத்தில் ஒரு பிரிவானது தனித்த மொழி, மொழி வரி வடிவம் மற்றும் கலாச்சாரத்தைக் கொண்டிருக்குமாயின், அவற்றை பாதுகாக்கும் உரிமையை வழங்குகிறது.
- ◊ அரசியலமைப்பு சிறுபான்மையினராக இருப்பவர்களுக்கு இந்தியாவின் எந்த பகுதியில் வசித்தாலும் அவர்களுடைய கலாச்சாரம் மற்றும் மதம் சார்ந்த நலன்களை இந்த சரத்தின் மூலம் பாதுகாக்கிறது.

**2. சரத்து 30 சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களை உருவாக்குதல் மற்றும் நிர்வாக அதிகாரம்**
**(Right of Minorities to Establish and Administer Educational Institutions)**

- ◊ சரத்து 30ல் சிறுபான்மையினர் சமூகமானது அதன் விருப்பத்திற்கேற்ப கல்வி நிறுவனங்களை நிறுவுவதற்கும் மற்றும் நிர்வாகம் செய்யவும் உரிமை பெற்றுள்ளது.

**சரத்து 32 அரசியலமைப்பு தீர்வு உரிமைகள்**

- அடிப்படை உரிமையை அமலாக்கவும், அவற்றை நிலைநிறுத்தவும் ஒரு சிறந்த கட்டமைப்பு மற்றும் அதற்கான தீர்வை சரத்து 32 வழங்குகிறது.
- அடிப்படை உரிமையை வழங்கும் ஒரு அடிப்படை உரிமை சரத்து 32 ஆகும்.
- சரத்து 32ஐ இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா என்று டாக்டர் அம்பேத்கர் குறிப்பிடுகிறார்.
- உச்சநீதிமன்றம் சரத்து 32 ஐ அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பாக அறிவித்துள்ளது.

பாராளுமன்றம் எந்த ஒரு நீதிமன்றத்திற்கும் (உயர்நீதிமன்றம் தவிர) ஆணை, கட்டணை மற்றும் சில நெறிமுறைகளை பிறப்பிக்கும் உரிமையை வழங்குகிறது. இருந்தபோதும் இவை உச்ச நீதிமன்றத்தின் அதிகாரத்தை மீறுவதாக இருக்கக் கூடாது. சரத்து 226ல் உயர் நீதிமன்றத்திற்கான ஆணை பிறப்பிக்கும் அதிகாரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பேராணையின் வகைகள்** (Types of Writs)

அடிப்படை உரிமைகளை அரசியலமைப்பில் எந்த ஒரு சட்டத்திருத்தத்தினாலும் மறுக்க இயலாது இவற்றை பின்வரும் முறையில் உச்சநீதிமன்றம் உறுதி செய்கிறது.

1. அடிப்படை உரிமையை அமலாக்க உச்சநீதிமன்றத்தை நாடும் அதிகாரம்.
2. உச்சநீதிமன்றம் அடிப்படை உரிமையை அமலாக்க பேராணை அல்லது ஆணை அல்லது விதிமுறைகளை பிறப்பிக்கலாம். அந்த பேராணைகள்

    1. ஆட்கொணர்வு நீதிப்பேராணை (Habeas Corpus)
    2. செயலுறுத்தும் நீதிப்பேராணை (Mandamus)
    3. தடையுறுத்தும் நீதிப்பேராணை (Prohibition)
    4. ஆவண கேட்புப் பேராணை (Certiorari)
    5. தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை (Quo warranto)

**பேராணை பிறப்பிற்கும் அதிகாரம் (Writ Jurisdiction)**

- அடிப்படை உரிமைகளை நிலைநிறுத்தும் உச்சநீதிமன்றத்தின் வரம்பு அசல் அதிகாரமே தவிர தனித்துவமானது அல்ல. உயர்நீதிமன்றங்களும் சரத்து 226இன் கீழ் அதற்கான அதிகாரத்தைப் பெற்றுள்ளன. நீதிப்பேராணைகள் “தனிச்சிறப்புடை நீதிப்பேராணைகள்” எனப்படும் ஆங்கிலேய சட்டத்தில் இருந்து எடுக்கப்பட்டவை ஆகும். இங்கிலாந்தில் அரசரின் பெயரால் வழங்கப்படும் இவை “நீதியின் ஊற்று” என்ற அழைக்கப்பட்டு வருகின்றன.

**பேராணையின் வகைகள்** (Types of Writs)

**1. ஆட்கொணர்வு நீதிப்பேராணை** (Habeas Corpus)

- ஆட்கொணர்வு என்ற சொற்றொடர் லத்தீன் மொழியில் “உடலை பெறுதல்” என்று பொருள்படும். சட்டவிரோத காவலில் அடைக்கப்பட்டிருக்கும் ஒரு நபர்

நீதிமன்றத்திற்கு கொண்டுவந்து நிறுத்தப்பட்டு அவரிடமிருந்து அவர் சிறையில் அடைக்கப்பட்டு இருப்பதற்கான காரணத்தை கேட்டு தெரிந்து கொள்ளப்பட வேண்டும்.

- அப்படி சிறையில் அடைத்து வைப்பது சட்ட மீறலாக இருக்கும்பட்சத்தில் கைது செய்யப்பட்ட நபரை விடுதலை செய்துவிடும் பொருட்டு தாக்கல் செய்யப்படும் மனு ஆகும். இந்த ஆணையை அரசுத் துறைக்கு எதிராகவோ தனி மனிதருக்கு எதிராகவோ வெளியிடலாம்.

## 2. செயலறுத்தும் நீதிப்பேராணை (Mandamus)

- இது ''**நாங்கள் கட்டளையிடுகிறோம்**'' எனப் பொருள்படும்.

- கீழ் நீதிமன்றங்களுக்கு உயர்நீதிமன்றம் பிறப்பிக்கும் ஒரு ஆணை ஆகும். இந்த ஆணை குறிப்பிட்ட நபருக்கு அல்லது அமைப்புக்கு எதிராக சில நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்துகிறது.

- எந்த ஒரு பொது நிறுவனத்திற்கோ, கழகத்திற்கோ, கீழமை நீதிமன்றத்திற்கோ அல்லது அரசாங்கத்திற்கோ எதிராக இந்த ஆணை வெளியிடப்படலாம்.

## 3. தடையுறுத்தும் நீதிப்பேராணை (Prohibition)

- இது ''தடை விதித்தல்'' எனப் பொருள்படும்.

- உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தால் கீழமை நீதிமன்றத்திற்கு வழங்கப்படும் ஒரு தடைக்கான நீதிப்பேராணை ஆகும். இதில் கீழ் நீதிமன்றமானது சட்டப்படி அளிக்கப்படாத எல்லையைத் தாண்டி வழக்குகளை செயல்படுத்த முடியாது என்பதை வலியுறுத்துகிறது.

## 4. ஆவணக் கேட்பு நீதிப்பேராணை (Certiorari)

- இது ஆவணம் வழங்கு (அ) ''விவரம் தெரிவி'' எனப் பொருள்படும்.
- உயர்நீதிமன்றம் அல்லது உச்சநீதிமன்றம் கீழ்நீதிமன்றத்திற்கும், தீர்ப்பாயத்திற்கும் வழக்குகளை மாற்றுவதற்கும் அல்லது வழக்கின் தீர்ப்பை அழிப்பதற்கு பிறப்பிக்கும் ஆணை ஆகும்.
- இந்த ஆணையானது சட்டப் பற்றாக்குறை அல்லது அதிகார வரம்பை மீறுதல் அல்லது சட்டத்தில் அதிகார வரம்பை மீறுதல் அல்லது சட்டத்தில் குற்றம் உள்ள சூழலில் பிறப்பிக்கப்படும் ஆணை ஆகும்.
- இவை தடையுறுத்தும் நீதிப்பேராணையிலிருந்து மாறுப்பட்டதாகும். அதாவது, தடையுறுத்தும் நீதிப்பேராணை வழக்குகளை தடை செய்கிறது.
- ஆனால் இந்த கட்டளை பேராணையானது வழக்கை தடைச் செய்வதோடு சட்டத்தை நெறிமுறைபடுத்துகிறது.

## 5. தகுதி முறை வினவும் நீதிப்பேராணை (Quo-warranto)

- அது ''**என்ன அதிகாரத்தில்**'' (அ) ''என்ன தகுதியில்'' எனப் பொருள்படும்.

- இவை பொது அலுவலக அல்லது அரசு சலுகைகளை பெறும் நபருக்கு எதிராக சட்டப்பூர்வ அதிகாரத்தை விசாரிக்க நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் ஆணையாகும்.

- ஒரு நபரின் பொது அலுவலகத்தை சட்டவிரோதமாக அபகரித்தலை இதன் மூலம் தடுக்கிறது.

- இந்த நீதிப்பேராணையை, அமைச்சர்கள் மற்றும் தனியர் அலுவலக பணியாளர்களுக்கு எதிராக பிறப்பிக்க இயலாது.

**உச்சநீதிமன்றம் வழங்கும் பேராணைக்கும், உயர்நீதிமன்றம் வழங்கும் பேராணைக்கும் இடையே உள்ள வேறுபாடு**

| உச்சநீதிமன்றம் | உயர்நீதிமன்றம் |
|---|---|
| a. உச்சநீதிமன்றம் அடிப்படை உரிமையை அமலாக்க மட்டுமே ஆணை பிறப்பிக்க முடியும்.<br>b. உச்சநீதிமன்றத்தின் அதிகார வரம்பு உயர் நீதிமன்றத்தை விட குறுகியது. | உயர்நீதிமன்றம் அடிப்படை உரிமைகளை அமல்படுத்துவதற்காக மட்டுமல்லாமல் வேறு எந்த நோக்கத்திற்காகவும் ஆணை வழங்க முடியும். |
| a. உச்சநீதிமன்றம் இந்திய பிரதேசத்தில் உள்ள அனைத்து நபருக்கும், அரசுக்கும் ஆணை பிறப்பிக்க முடியும்<br>b. ஆணை வெளியிடும் நோக்கத்திற்காக உச்சநீதிமன்றத்தின் பிராந்திய அதிகார வரம்பு உயர்நீதிமன்றத்தை விட பரந்ததாகும். | உயர்நீதிமன்றம் பிராந்திய அதிகார எல்லைக்குள் மட்டுமே ஆணை பிறப்பிக்கும். |
| சரத்து 32ன் கீழ் தீர்வு காணும் பேது இவை அடிப்படை உரிமையாக இருந்தாலும் உச்ச நீதிமன்றம் ஆணை பிறப்பிக்காமல் இருக்க முடியாது | சரத்து 226ன் கீழ் தீர்வு காணும் போது இவை விருப்புரிமை ஆதலால் உயர்நீதிமன்றம் ஆணையை பிறப்பிக்க முடியாது. |

**சரத்து 33 அடிப்படை உரிமைகள் மற்றும் ஆயுதப் படைகள்**
**(Armed Forces and Fundamental Rights)**

- சரத்து 33 பாராளுமன்றத்திற்கு இராணுவம், துணை இராணுவம், காவல்துறை மற்றும் உளவு அமைப்புகளின் படை உறுப்பினர்களுக்கான அடிப்படை உரிமைகளை மாற்ற அதிகாரம் உள்ளதை குறிப்பிடுகின்றது.

- இதனடிப்படையில், பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்கள், தரைப்படைச்சட்டம் (1950), விமானப்படைச் சட்டம் (1950), கடற்படைச் சட்டம் (1957), காவல் படைகள் (உரிமைகள் கட்டுப்பாடு) சட்டம் (1966), எல்லைப்பாதுகாப்புப் படைச்சட்டம் (1968) முதலியன.

**சரத்து 34 : இராணுவச் சட்டம் அமலில் உள்ளபோது அடிப்படை உரிமை மீதான தடை**

இச்சரத்து, இராணுவ சட்டமானது இந்திய நாட்டின் எல்லைக்குள் ஏதேனும் ஒரு பகுதியில் நடைமுறையில் இருந்தால், அப்பகுதியில் அடிப்படை உரிமைகள் மீது கட்டுப்பாடு விதிக்க வழி செய்கிறது. இதற்கான கட்டுப்பாடுகளை விதிக்க பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

இராணுவச் சட்டமானது ஆங்கிலேய பொதுச்சட்டத்தில் இருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது. எனினும், 'இராணுவச் சட்டம்' என்பது அரசியலமைப்பில் எங்கும் வரையறுக்கப்படவில்லை.

**சரத்து 35 : அடிப்படை உரிமைகள் தொடர்பானவற்றில் சட்டங்கள் இயற்றும் அதிகாரம்.**

சில அடிப்படை உரிமைகளைச் செயல்படுத்தும் பொருட்டு சட்டங்களை இயற்றிட பாராளுமன்றம் மட்டுமே அதிகாரம் பெற்றுள்ளது. சட்டமன்றங்களுக்கு இல்லை.

அடிப்படை உரிமைகளின் தன்மை மற்றும் அவற்றின் மீறலுக்கான தன்மையில் இந்தியா முழுவதும் ஒரு ஒற்றுமையை உருவாக்குவதை இந்த சரத்து உறுதி செய்கிறது.

**சொத்துரிமையின் தற்போதைய நிலை :**

- முதலில் சொத்து உரிமை அரசியலமைப்புக்கு கீழ் பகுதி IIIல் அடிப்படை உரிமையாக சரத்து 19 (1)(f)லும் மற்றும் 31லும் இருந்தது.
- சரத்து 19 (1)(f) ஒவ்வொரு குடிமகனுக்கும் சொத்தினை பெறுவதற்கும் அதை நிர்வாகிப்பதற்கும் மற்றும் கொடுப்பதற்கும் உரிமை இருக்கிறது என்பதை கூறுகிறது.
- சரத்து 31 ஒவ்வொரு நபரும் குடிமகனாக இருந்தாலும் குடிமகனாக இல்லையென்றாலும் அவருடைய சொத்து பறிக்கப்படுவதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் உரிமையை வழங்குகிறது.
- இந்த சரத்து எந்த ஒரு தனிநபருடைய சொத்தினையும் சட்டப்படி அகற்ற முடியாது என்பதை உறுதி செய்கிறது.
- 1978, 44வது அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தின் மூலம் அடிப்படை உரிமையாக இருந்த சொத்து உரிமை (சரத்து 19(2)(f) மற்றும் சரத்து 31) பகுதி IIIலிருந்து நீக்கப்பட்டு சரத்து 300A-ல் (பகுதி III) சட்ட உரிமையாக சேர்க்கப்பட்டது.
- சொத்து உரிமை **சட்ட உரிமை** அல்லது அரசியலமைப்பு உரிமையாக மாறியது.
- இந்த உரிமை அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பு உரிமை இல்லை.

**அடிப்படை உரிமைகளின் விலக்குகள்**

**1 வது சட்டதிருத்தம்**

அறிமுகப்படுத்தப்பட்டது - 1951

நடைமுறைப்படுத்தப்பட்டது - 18.06.1951

தொடர்புடைய சரத்துக்கள் - சரத்து 15, 19, 85, 87, 174, 341, 342, 372, 376, 31-A, 31-B, 9வது அட்டவணை சேர்க்கப்பட்டது

**நோக்கங்கள்**

- நில சீர்திருத்தத்தை பாதுகாப்பதற்காக 9வது அட்டவணை சேர்க்கப்பட்டது.
- பேச்சு சுதந்திரம், பொது ஒழுங்கு வெளிநாட்டு அரசுகளுடன் நட்புறவுகள் மற்றும் ஒரு குற்றத்திற்கான தூண்டுதல் ஆகியவற்றின் மீது மூன்று தடைகள் விதிக்கப்பட்டது.
- சமூக மற்றும் பொருளாதார ரீதியில் பின்தாங்கிய வகுப்புகளின் முன்னேற்றத்திற்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்ய மாநிலத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டது.
- சட்டசபைகளில் கூட்டத்தொடர்கள், நீதிபதிகளின் நியமனம் மற்றும் இட ஒதுக்கீடு தொடர்பான விதிகள் பாதிக்கப்பட்டன.
- ஜமின்தாரி முறை ஒழிப்பு

**சரத்து 31A** : சரத்து 14 மற்றும் 19 உடன் மீறிச் செயல்படக்கூடிய ஐந்து விதமான சட்டங்களைப் பாதுகாத்தல்

**சரத்து 31B**: 9வது அட்டவணையில் உள்ள சில சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் பாதுகாத்தல். I.R. கோயல் ஹோ வழக்கில் (2007), 9வது அட்டவணையில் உள்ள அனைத்து சட்டம் மற்றும் ஒழுங்குமறைகளுக்கும் விலக்கு அளிக்க முடியாது என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. 9வது அட்டவணையில் முதலில் 13 சட்டங்கள் இருந்தன. தற்போது, 284 சட்டங்கள் உள்ளன.

**ஒன்பதாவது அட்டவணை**

- இது நிலச் சீர்திருத்தங்கள் மற்றும் ஜமீன்தாரி முறை ஒழிப்பு தொடர்பான அந்த ஒப்பந்தத்தின் மாநிலச்சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைக் கையாள்கிறது. இது பாராளுமன்றத்தின மற்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளையும் கையாள்கிறது.
- 1வது திருத்தச் சட்டம் 1951, அடிப்படை உரிமைகளை மீறும் அடிப்படையில் நீதித்துறை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட சட்டங்களைப் பாதுகாப்பதற்காக ஒன்பதாவது அட்டவணையைச் சேர்த்தது.

❖ இருப்பினும், ஏப்ரல் 24, 1973க்கு பிறகு இந்த அட்டவணையில் சேர்க்கப்பட்ட சட்டங்கள் நீதித்துறை மறுஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்று உச்ச நீதிமன்றம் 2007 ஆம் ஆண்டில் தீர்ப்பளித்தது.

**25வது திருத்தச் சட்டம் 1971 இன் இரண்டு விதிகளைக் கொண்டுள்ளது:**

- சொத்துக்கான அடிப்படை உரிமையை நீக்கியது
- சட்டக்கூறு 14, 19 மற்றும் 31 இன் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட உரிமைகளை மீறும் அடிப்படையில், சட்டக்கூறு 39(B) அல்லது (C) இல் உள்ள உத்தரவுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட எந்தச் சட்டமும் திருத்தம் செய்ய முடியாது.

**சரத்து 31C**: அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைகளைச் செயல்படுத்த இயற்றப்படும் சட்டங்களைப் பாதுகாத்தல்.

iii. சமத்துவ நெறிமுறைக் கோட்பாடாகிய சரத்து 39(b) அல்லது (c) ஐ செயல்படுத்த ஏற்படுத்தப்படும் சட்டங்கள் சரத்து 14 மற்றும் 19ஐ மீறியதாக செல்லாததாக்க இயலாது.

iv. இவ்வாறு இயற்றப்பட்ட சட்டங்களை எக்காரணத்திற்காகவும் நீதிமன்றங்களில் கேள்விக்குட்படுத்த இயலாது.

**சரத்து 361-A** - நாடாளுமன்ற அவைகளின் அல்லது ஒரு மாநிலத்தின் சட்டமன்ற அவைகளின் எந்தவொரு நடவடிக்கைகளின் கணிசமான உண்மை அறிக்கையை செய்தித்தாளில் (அல்லது வானொலி அல்லது தொலைக்காட்சி மூலம்) வெளியிடுவது தொடர்பாக எந்தவொரு நீதிமன்றத்திலும் எந்தவொரு உரிமையியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளுக்கும் எந்தவொரு நபரும் உள்ளாக மாட்டார்கள்.

**சரத்து 105** - எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றத்திலோ அல்லது அதன் எந்தவொரு குழுவிலோ அவர் கூறியது அல்லது எந்தவொரு வாக்கெடுப்பு குறித்தும் எந்தவொரு நீதிமன்றத்திலும் எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் பொறுப்பேற்க முடியாது.

**சரத்து 194** - ஒரு மாநிலத்தின் சட்டமன்ற உறுப்பினர் எவரும், சட்டமன்றத்திலோ அல்லது அதன் குழுவிலோ அவர் கூறியது அல்லது வாக்குகள் தொடர்பாக எந்தவொரு நீதிமன்றத்திலும் எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் பொறுப்பேற்க முடியாது.

## கிரகணத்தின் கோட்பாடு

1. அடிப்படை உரிமைகளுக்கு முரணான எந்தச் சட்டமும் செல்லாது என்று கிரகணக் கோட்பாடு கூறுகிறது. அது முற்றிலும் இறந்துவிடவில்லை. ஆனால் அடிப்படை உரிமையால் மறைக்கப்பட்டது.
2. அரசியலமைப்பு தொடங்கப்படுவதற்கு முன்னர் உருவாக்கப்பட்ட எந்தவொரு சட்டமும் இந்திய அரசியலமைப்பின் பகுதி III உடன் இணக்கமாக இருக்க வேண்டும் என்று 13வது பிரிவு கூறுகிறது.

3. **கிரகணத்தின் கோட்பாட்டின் கூறுகள்:**
   - அது அரசியலமைப்புக்கு முந்தைய சட்டமாக இருக்க வேண்டும்.
   - அடிப்படை உரிமைகளுடன் முரண்பட வேண்டும்.
   - சட்டம் ஒரு இறந்த கடிதமாக மாறாது. ஆனால் செயலற்றதாக மட்டுமே இருக்கும்.
   - எதிர்காலத்தில் அடிப்படை உரிமைகளில் திருத்தம் இருந்தால், அது தானாகவே தடை செய்யப்பட்ட சட்டத்தை செயல்பட வைக்கும்.

4. **இந்திய அரசியலமைப்பு பகுதி XX, பிரிவு 368:**
   - இந்திய நாடாளுமன்றத்தின் அதிகாரங்களை வரையறை செய்யும் பிரிவாகும்.
   - மேலும் இப்பிரிவு அரசியலமைப்புச் சட்டங்களில் திருத்தம் மேற்கொள்ளவும், புதிதாக பகுதியை சேர்க்கவும் அல்லது இருக்கும் பகுதியை நீக்கவும் இந்திய நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கியுள்ளது.
   - நாடாளுமன்றத்திற்கு, இந்திய அரசியலமைப்புச் சட்டங்களில் திருத்தம் மேற்கொள்வதற்கு வழிகாட்டுகிறது.

APOLLO STUDY CENTRE